# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.
**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW26**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **திருமதி.விசாலாட்சி** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 08th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவருக்காக குவிமுச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை காணொலி காட்சி கணினி திரையிலேயே எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**(R.O.C.No.34833/2025/F1, நாள்.13.06.2025-ன் படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற காணொலி காட்சி விதிகள் 2020-ன் கீழ் அ.சா.26 திருமதி.விசாலாட்சி, சென்னை, தடய அறிவியல் துறையில் கணிணி தடயவியல் பிரிவில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருவதால்,**

**சென்னையிலிருந்து கரூருக்கு வந்து செல்லும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, தடய அறிவியல் துறை அலுவலரான சாட்சி சென்னை, மத்திய தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து Static IP.59.92.229.201–ன் மூலம் இன்று கணொலி காட்சி மூலமாக ஆஜராகி சாட்சி இந்நீதிமன்ற இருக்கை எழுத்தர் திருமதி.ஜெயந்தி, என்பவர் மூலம் உறுதி செய்யப்பட்டு அவர்கள் மூலமாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்.)**

முதல் விசாரணை

நான் தற்போது சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் இயக்குநராக முழு கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2021 அன்று நான் அதே துறையில் கணினி அறிவியல் பிரிவில் துணை இயக்குநராக பணியில் இருந்தபோது வேலாயுதம்பாளையம் காவல்நிலைய குற்ற எண். 778/2020 வழக்கில் சம்மந்தப்பட்ட முத்திரையிடப்பட்ட ஒரு காகித பொட்டலம் ஒன்று இரண்டாம்நிலை காவலர் திரு.சதீஸ்குமார் என்பவர் மூலம் நீதித்துறை நடுவர் எண்.2, கரூர் அவர்களின் கடிதத்துடன் எங்கள் ஆய்வகத்தில் பெறப்பட்டது. அவற்றிற்கு CF.No. 32/2021, நாள். 01.02.2021 என வழங்கப்பட்டது. முத்திரையிடப்பட்ட காகித பொட்டலத்தின் மீது வேலாயுதம்பாளையம் காவல்நிலைய குற்ற எண். 778/2020, R.P.No.01/2021 என குறிக்கப்பட்டிருந்தது. காகித பொட்டலத்தின் மீதிருந்த முத்திரை நீதிமன்ற கடிதத்தில் கொடுக்கப்பட்டிருந்த மாதிரி முத்திரையுடன் ஒப்பிட்டு

பார்த்ததில் சரியாக இருந்தது. அந்த காகித பொட்டலத்தை பிரித்து பார்த்தபோது, அதில் மூன்று முத்திரையிடப்பட்ட காகித உறைகள் இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் ஒரு பென்டிரைவ் மற்றும் காம்பேக்ட் டிஸ்க் சிடி இருந்தது. விவரங்கள் அனைத்தும் ஆய்வறிக்கையில் உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட, வழக்குச்சொத்துக்கள் கணிணி தடயவியல் பகுப்பாய்வுக்கு (Computer forensic examination) உட்படுத்தப்பட்டது. அயிட்டம் 1–A ல் உள்ள பென்டிரைவ் Forensic software tool UFED 4PC மூலம் அவற்றிலிருந்த கோப்புகள் வெளிகொணரப்பட்டன. அவற்றில் இரண்டு வீடியோ காணொலி பதிவுகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை பற்றிய குறிப்புகள் ஆய்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. அயிட்டம் 1–B ல் உள்ள காம்பேக்ட் டிஸ்க்கில் இரண்டு வீடியோ கோப்புகள் அயிட்டம் 1–A பென்டிரைவில் உள்ள இரண்டு வீடியோ கோப்புகள் அவற்றில் காணப்பட்டன. அயிட்டம் 2–A ல் உள்ள பென்டிரைவ் forensic software tool UFED 4 PC மூலம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் இருந்த தகவல்கள் வெளிகொண்டு வரப்பட்டன. அவற்றில் ஒரு வீடியோ கோப்பு சேமித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த வீடியோ கோப்பின் விவரங்கள் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அயிட்டம் 2–B ல் உள்ள காம்பேக்ட் டிஸ்க்கில் ஒரு வீடியோ கோப்பு பென்டிரைவ் அயிட்டம் 2–A ல் உள்ளதுபோல் காணப்பட்டது. அயிட்டம் 3–A ல் உள்ள பென்டிரைவ் Forensic software tool UFED 4PC மூலம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு,

அதிலிருந்த தகவல்கள் வெளிகொணரப்பட்டன. அவற்றில் நான்கு வீடியோ பதிவுகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் விவரங்கள் ஆய்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. அயிட்டம் 3-B ல் உள்ள காம்பேக்ட் டிஸ்க்கில் நான்கு வீடியோ பதிவுகள் அயிட்டம் 3-A ல் உள்ள பென்டிரைவ்வில் உள்ளதுபோல் காணப்பட்டன. மேற்குறிப்பிட்ட வீடியோ கோப்புகளை மேற்குறிப்பிட்ட அயிட்டம் 1-A, 2-A, 3-A வீடியோ கோப்புகளை ஒரு டிவிடி-யில் காப்பி செய்து, அவற்றிற்கு CF 32/21 என குறியீடு செய்யப்பட்டது. இந்த ஆய்வறிக்கை, ஆய்வகத்தில் காப்பி செய்யப்பட்ட டிவிடி மற்றும் வழக்குச்சொத்துக்களுடன் ஆய்வக முத்திரையிட்டு, 27.04.2021 அன்று காவலர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. **அந்த ஆய்வறிக்கையில் நானும், உதவி இயக்குநர் திரு.மணிவண்ணன் அவர்களும் கையெழுத்திட்டோம். என்னிடம் காட்டப்படுவது அந்த அறிக்கை. அது நீ.ம.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வகத்தில் காப்பி செய்யப்பட்ட டிவிடி என்னிடம் காட்டப்படுவது. அது நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட சிடி 1B என்னிடம் காட்டப்படுவது. அது இதுதான். அது ஆட்சேபனையுடன் நீ.ம.சா.ஆ.3 ஆக செய்யப்படுகிறது. (65 பி சான்றிதழ் இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.) நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட சிடி 2B என்னிடம் காட்டப்படுவது. அது இதுதான். அது ஆட்சேபனையுடன் நீ.ம.சா.ஆ.4 ஆக செய்யப்படுகிறது. (65 பி சான்றிதழ் இல்லாததால்**

**ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.) நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட சிடி 3B என்னிடம் காட்டப்படுவது இதுதான். அது ஆட்சேபனையுடன் நீ.ம.சா.ஆ.5 ஆக செய்யப்படுகிறது. (65 பி சான்றிதழ் இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.) நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பென்டிரைவ் அயிட்டம் 1–A இதுதான். அது ஆட்சேபனையுடன் நீ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்டுகிறது. (65 பி சான்றிதழ் இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.) நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பென்டிரைவ் அயிட்டம் 2–A இது தான். அது ஆட்சேபனையுடன் நீ.ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்டுகிறது. (65 பி சான்றிதழ் இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.) நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பென்டிரைவ் அயிட்டம் 3–A ஆட்சேபனையுடன் நீ.ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்டுகிறது. (65 பி சான்றிதழ் இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.)** காவல்துறையினர் என்னை விசாரித்தார்களா என்று ஞாபகமில்லை.

***(மேற்சொன்ன ஆவணங்கள் காணொலி காட்சியில் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு சரியென்று சாட்சியால் அடையாளம் காண்பிக்கப்பட்டது.)***

**7 மற்றும் 9 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

01.02.2021 ஆம் தேதியன்று நீங்கள் மேற்சொன்ன நீதிமன்ற சான்றாணவணங்களை பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன நீதிமன்ற சான்றாவணங்கள் உங்களுக்கு

நீதிமன்றத்திலிருந்து வருவதற்கு முன்பாக யார் யாரிடம் இருந்தது என்ற விவரம் குறித்து எனக்கு விவரம் தெரியாது. சிசிடிவி கேமராவில் உள்ள பதிவுகள் டிவிஆரில் உள்ள ஹார்ட்டிஸ்க்கில் பதிவாகும் என்று சொன்னால் சரிதான். அதில் பதிவுகளை ஒரு போல்டரில் Text Files, Image Folder இருக்கும் என்று சொன்னால் வீடியோ பதிவுகள் மட்டும் பதிவாகியுள்ளது. ஒவ்வொரு வீடியோ பைல்களை காப்பி செய்யும்போது Hash Value என்ற தனித்துவமான அடையாளம் உண்டு என்ற சொன்னால் சரிதான் வீடியோ பைலின் Hash Value ஆகும். அந்த வீடியோ பதிவுகள் பென்டிரைவில் காப்பி செய்யும்போது என்று சொன்னால் ஏற்கனவே File Hash என்று இருக்கும் என்றால் பென்டிரைவில் Hash Value உடன் தான் காப்பி செய்யப்பட்டுள்ளது. வீடியோ பைலின் Hash Value வை பென்டிரைவிலோ சீடியிலோ டிவிடியிலோ காப்பி செய்யும்போது வீடியோ File Hash Value மாறாது அப்படியே தான் இருக்கும். Hash Value உள்ள வீடியோ பைலை Edit செய்தாலோ, Trim செய்தாலோ, Edit செய்து அதனை காப்பி செய்யும்போது அதன் Hash Value மாறும் என்று சொன்னால் காப்பி செய்யப்பட்ட அல்லது நகல் எடுக்கப்பட்ட வீடியோ பைலின் Hash Value மாறும். இவ்வழக்கில் உங்களுக்கு கொடுக்கப்பட்ட 1A வீடியோவில் 1 நிமிடம் 9 விநாடிகள் ஓடும் வீடியோவில் ஒரு நாய் வலது பக்கத்திலிருந்து 0.59 வது விநாடியில் (17-12-2020 04.24.04 PM – நீதிமன்ற குறிப்பு) நாய் உள்ளே வருகிறது. அங்கு 9 விநாடிகள் நாய் நின்று விட்டு இடது புறமாக நாய் திரும்பி சென்றுவிடுகிறது என்றும் அதன்பிறகு 4 விநாடிகள் கழித்து

இடது பக்கம் திரும்பி நாய் வருகிறது அவ்வாறு வரும்போது 2 விநாடிகள் நாய் நிற்கிறது அதோடு வீடியோ முடிவடைவயும் நேரத்தில் வீடியோ Edit செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அந்த கேமராவில் எது Focus செய்யப்பட்டுள்ளதோ அது வரை தான் படம் எடுக்கும். (மேற்சொன்ன 1A வீடியோ காணொலி காட்சி மூலமாக Screen Share செய்யப்பட்டு எதிரி தரப்பு வழக்கறிஞர், சாட்சி இருவருக்கும் காண்பிக்கப்பட்டது.) மேலும் எங்களுக்கு அனுப்பப்பட்ட பென்டிரைவ், சீடிகளும் அனுப்பப்பட்டது ஹார்ட்டிஸ்க் அனுப்பவில்லை. அப்போதுதான் அதற்கு முன்னால் உள்ள பதிவுகளை பார்த்து சொல்ல முடியும். அயிட்டம் 1A, 1B, அயிட்டம் 2A, 2B, அயிட்டம் 3A, 3B ஆகியவை காப்பி செய்யப்பட்ட பென்டிரைவுகள், சிடிகளில் உங்களுடைய டிவிடியில் காப்பி எடுத்து கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன சான்றாவணங்களுக்குரிய அசல் டிவிஆரையோ, ஹார்ட்டிஸ்க்கையோ அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். அசல் டிவிஆரையோ, ஹார்ட்டிஸ்க்கையோ அனுப்பியிருந்தால்தான் உங்களால் 65 பி சான்றிதழ் அளித்திருக்க முடியும் என்று சொன்னால் சரிதான். MD File என்பது Hash Value குறிப்பிடுவதாகும். நீங்கள் Hash Value வை பென்டிரவிற்கு கொடுத்துள்ளீர்கள் என்றும் சிடிக்கு கொடுக்கவில்டிலை என்று சொன்னால் சிடிக்கு மென்பொருள் மூலம் கொடுக்க முடியாது என்பதால் Hash Value கொடுக்கவில்லை. மானுடவியல் பிரிவு என தனிப்பிரிவு உங்கள் அலுவலகத்திலேயே உள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரியின் புகைப்படத்தை மானுடவியல்

பிரிவிற்கு அனுப்பி புகைப்படத்தில் உள்ள நபரையும், வீடியோவில் உள்ள நபரையும் கண்டறிய முடியும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு எதிரியின் புகைப்படத்தை விடியோவுடன் ஒப்பிட்டு பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் ஆய்வறிக்கை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.09 19:06:09 +0530

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.